விலை: சதம் 75 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 கார்த்திகை 22 ஸபர் 8 இதழ் 295
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7-12-81

## கவிதை நடையில்! 'குட்டிமணி' பேசுகிறார்

(கொழும்பு)

பனாகொடையில் இராணுவப் பாதுகாப்பில் இருக்கும் குட்டிமணி தமது சட்டத்தரணிகளுடன் கவிதை நடையிலேயே பேசுவதாக தெரிவிக்கப்பட்டது.

குட்டிமணியை நேற்று அவரது சட்டத்தரணிகள் பனாகொடையில் சந்தித்தனர். சட்டத்தரணிகள் சி. வி. விவேகானந்தன், ஆர். ஸ்ரீனிவாசன், பி. பாக்கியநாதன், எஸ். பேரின்பநாயகம் ஆகியோர் குட்டிமணியைச் சந்தித்து உரையாடியபொழுது குட்டிமணி கவிதைவடிவில் தான் உரைத்தாராம். [ ]

## துப்பாக்கி வைத்திருந்தவர் றிமாண்டில்!

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரமில்லாத துவக்கும் ஒன்பது தோட்டாக்களும் வைத்திருந்ததாக மிருசுவிலைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் சிவநேசன் சாவகச்சேரிப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி சீ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் சந்தேகநபர் ஆஜர்செய்யப்பட்டு இம்மாதம் 14ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டார். [ச]

★ நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட

# யாழ். அபிவிருத்திசபை 'பட்ஜட்' நிராகரிக்கப்பட்டது!

### தணிக்கை

[redacted]

## சபைக் கூட்டத்தில் காரசாரமான விவாதம்

—(நமது நிருபர் ஏ. வி. மாணிக்கம்—

யாழ். மாவட்ட அபிவிருத்திசபையின் நிறைவேற்றுக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட 1982-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் (பட்ஜட்) காரசாரமான விவாதத்தின் பின்னர் நேற்று அபிவிருத்திசபையால் நிராகரிக்கப்பட்டது.

இந்த வரவு-செலவுத்திட்டம் ஒரு குழுநிலையில் ஆராய்ந்து தயாரிக்கப்பட்டு, இம்மாதம் 19-ந் திகதி நிறைவேற்றுக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு 29-ந் திகதி மீண்டும் அபிவிருத்திசபையில் சமர்ப்பிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

யாழ் செயலகத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டம் நேற்றுக் காலை 9 மணிக்கு சபைத்தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் ஆரம்பமானது.

திரு. நடராசா யாழ். இந்து மத்திய மகாவித்தியாலயத் திறப்பு விழாவுக்குச் செல்ல வேண்டியிருந்ததால் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் திரு. எஸ். நாகராசா தலைமையில் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

### பண்டிதர் குறுக்கீடு

கூட்ட நிகழ்ச்சி நிரலின்படி மூன்றாவதாக அபிவிருத்தி சபையின் வரவுசெலவுத்திட்ட நகல் அறிக்கை சபையில் ஆராய்வதற்காக எடுக்கப்பட்டது.

அப்பொழுது ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறுக்கிட்டு, இத்திட்ட அறிக்கையைப் பரிசீலனைசெய்ய கால அவகாசம் போதாதென்றும், உறுப்பினர்களினால் கொடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்குப் பதிலாக வேறு வேலைத்திட்டங்கள் புகுத்தப்பட்டிருப்பதாகவும் குற்றம் சுமத்தினர்.

### 'அமிர்' விளக்கம்

எதிர்க்கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம், திட்டமிடல் அதிகாரியே வரவுசெலவுத் திட்டத்துக்குப் பொறுப்பாக இருந்திருப்பதால் அவரிடம் இதுபற்றி விளக்கம் கேட்க வேண்டுமென்றும், அவர் இன்று இக்கூட்டத்தில் இல்லாமையால் எதுவும் அறிய முடியாமல் இருப்பதாகவும் கூறினார்.

[6-ம் பக்கம் பார்க்க]

## அபிவிருத்திசபை: 'சங்கரி' நிலை என்ன?

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையில் இனி கிளிநொச்சி எம். பி. திரு வீ. ஆனந்தசங்கரி தொடர்ந்து ஒரு உறுப்பினராக இருக்கின்றாரா? அல்லது தனை விலக்கிக்கொண்டாரா? அவர் நிலை என்ன?

இவ்வாறு அபிவிருத்திசபை உறுப்பினர்கள் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை இவ்வருடம் ஜூலை மாதம் 20-ந் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. முதலாவது கூட்டம் அதே மாதம் 28-ந் திகதி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் மாதத்தில் இரண்டு கூட்டங்களும் செப்டம்பர் மாதம் இரண்டு கூட்டங்களும் அக்டோபர் மாதம் ஒரு கூட்டமும் நவம்பர் மாதத்தில் ஒரு கூட்டமும் டிசம்பரில் (இதுவரை) நேற்று ஒரு கூட்டமும் என்று மொத்தம் ஒன்பது தடவைகள் நடைபெற்றன.

இவற்றில் ஜூலை மாதம் 28-ந் திகதி (ஒரு தடவை) மட்டும் திரு. வீ. ஆனந்தசங்கரி கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தார். ஏனைய கூட்டங்களுக்கு அவர் வரவில்லை.

இதனைத் தொடர்ந்தே சபை அங்கத்தவர்கள் சிலர் அவர் நிலை குறித்து கேள்வி எழுப்புகின்றனர்.

## சபையில் கேட்ட ராஜினாமா விஷயம்

(யாழ்ப்பாணம்)

"மாவட்ட அபிவிருத்தி சபையின் தலைவராக இருக்கும் நான் ஒரு நீதிபதி என்றமுறையில் கடமையாற்றுகிறேன், கட்சிசார்பாக நான் இங்கு கடமையாற்றவிருக்கவில்லை"

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு சு. நடராசா நேற்று நடைபெற்ற யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் உத்தியோக நியமனம் சம்பந்தமான தீர்மானம் ஒன்றின் விவாதத்தின் மீது பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எனது தலைமையின் கீழ் இச்சபை இயங்கும்வரை எந்தவித ஊழலுக்கும் பாகுபாட்டுக்கும் இடமளிக்கமாட்டேன்" என்றும் அவர் உறுதியளித்தார்.

"எனது நிர்வாகத்தில் ஏதாவது தவறிழைப்பதாக தெரியப்படுத்தினால் உடனடியாக ராஜினாமா செய்யத் தயார்" என்றபோது உறுப்பினர் திரு சின்னத்துரை குறுக்கிட்டு, ஏற்கனவே தவறிழைத்த ஒரு உத்தியோகத்தர்பற்றி தங்களுக்கு புகார் செய்திருந்தும் மீண்டும் அவருக்கு நியமனம் வழங்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டினர்.

தலைவர் இதற்குப் பதிலளிக்கையில், இந்நியமனம் முன்பு நடைபெற்ற விஷயம் இப்பொழுது ஏதும் நடைபெறுமாயின் எனக்கு எழுத்துமூலம் சமர்ப்பியுங்கள், அவரை உடனடியாக வேலையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்" என்றார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் குறுக்கிட்டு, "தலைவர் மீது எங்களுக்கு பூரண நம்பிக்கை உண்டு; அவர் நிர்வாகத்தில் தலையிடமாட்டோம்" என்றார். [மா]

## தனிச் சிங்களத்தில் நியமனக் கடிதம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு 14 புதிய டாக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் தனிச் சிங்களத்தில் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளது.

1981ம் ஆண்டு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய தமிழ் டாக்டர்களுக்கே சிங்கள மொழி மூலம் நியமனக்கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது.

## சீமெந்து விலை திடீர் அதிகரிப்பு!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்து விநியோக பிரிவில் சீமெந்தின் விலை 72 ரூபாவிலிருந்து 76 ரூபாவாக திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளது!

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பாவனையாளர்களுக்கு வீடுகளிலேயே கொண்டுசென்று சீமெந்து விநியோகிக்கும் விநியோகப் பிரிவில் பைக்கற் ஒன்றுக்கு 64 ரூபாவும் போக்குவரத்துச் செலவுக்காக 8 ரூபாவும் மொத்தம் 72 ரூபா பைக்கற் ஒன்றுக்கு அறவிடப்பட்டது. ஆனால் கடந்த 1ம் திகதியிலிருந்து இந்த சீமெந்தின் விலை 76 ரூபாவாக திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளது.

## மிருசுவில் கொலை; மற்றொருவர் கைது

(சாவகச்சேரி)

மிருசுவில் லொறிச்சாரதி பத்மநாதன் கொலை சம்பந்தமாக மிருசுவிலைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் சிவநேசன் என்பவர் சாவகச்சேரிப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த இராஜசிங்கத்தினால் மாவட்ட நீதிமன்ற நீதிபதி சீ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அடையாளஅணிவகுப்பிற்கு உத்தரவிடப்பட்டு இம்மாதம் 14ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (ச)

## இன்று மாநாடு

கொழும்பு

[illegible] திட்டக்குழுவின் மகாநாடு இன்று கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

## 25 பேர் பலி!

புதுடில்லி, டிச 6

குஜராத்தில் உள்ள ஆலயத்தில் நடந்த தீவிபத்தினால் 25 பேர் பலியானார்கள். [ ]

### மணிவாக்கு

உலகப் பற்றில் தோய்ந்து கிடக்கும் மனம் ஒரு ஈர நெருப்புக் குச்சியாகும்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

## பூரண மனிதன்

கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ தொடக்கம் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன வரைக்கும் கல்வியின் நோக்கம் பற்றி ஆராயாத அறிஞர்கள் எவரும் இலரெனலாம்.

கொழும்பு அரச கல்லூரி (Royal College) பரிசளிப்பு விழாவில் பேருரை நிகழ்த்திய ஜனாதிபதி ஜெயவர்த்தன கல்வி பற்றி தமது சுய சிந்தனையைக் கொண்டே சில சிந்தனைக்குரிய கருத்துக்களை வழங்கியிருக்கிறார். கல்வியை ஒரு தொழிலுக்கு ஒப்பிட்டால் அதன் உற்பத்திப்பொருள் பூரண மனிதனே என்பது ஜனாதிபதி வலியுறுத்திய கருத்து.

"மனிதனிலே இயல்பாக அமைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி" என்று விளக்கியவர் சுவாமி விவேகானந்தர்.

இது இலகுவான பணியல்லவென்பதை அறியாதார் யார்?

இதன் அடிப்படையை ஆராயும்போது இதனை இலகுவாக விளக்க முயன்ற ஒரு அறிஞரின் கூற்று நினைவுக்கு வருகிறது.

"பாடசாலையில் படித்த அனைத்தையும் முற்றாக மறந்தபின் எது எஞ்சி நிற்கின்றதோ அதுவே உண்மையான கல்வி"

ஜனாதிபதி ஜெயவர்த்தன குறிப்பிட்ட 'பூரண மனிதன்' மேலே கூறப்பட்ட விளக்கத்துக்கு ஒற்றுமையானது; அவர் அதனை விளக்கியபோது "புத்தகப் படிப்பினால், பரீட்சை தேறுவதால் மட்டும் பூரண மனிதன் உருவாகமாட்டான்" என்பதையும் வற்புறுத்தியிருந்தார்.

புத்தகங்களுக்கும் பரீட்சைகளுக்கும் முக்கிய இடமுண்டு என்பதை 'மட்டும்' என்று கவனமாகச் சொல்லப்பட்ட சொல் விளக்குகின்றது. இதனைப் புரிந்து ஜனாதிபதி கலையுடன் நினைவு கூர்ந்த விளையாட்டு முறையை Team-games கருத்திற்கொள்பவர்கள் நிச்சயம் ஏமாற்றமடைவது இயல்பு.

அரசியல் துறையில் நீண்டகாலம் ஈடுபட்டு, அரசியல் கட்சியை கட்டிவளர்ப்பதில் ஆற்றலும் அனுபவமும் உண்டவர் ஜனாதிபதி ஜெயவர்த்தன கிரிக்கெட் விளையாட்டில் தமது குழுவினருக்கு வெற்றியீட்டிக் கொடுத்தும், தோல்வியைத் தைரியமாக ஏற்றுக் கண்ணியமாக விளையாடியும் பயிற்சி பெற்றவர். அப்பயிற்சி அரசியலில் வெற்றிபெற உதவியதைக்கொண்டே இந்த விளையாட்டு முறையைச் சிறந்ததாகக் கணித்திருக்கிறார் ஜனாதிபதி அவர்கள்.

அரச கல்லூரி அவருடைய மாணவ காலத்தில் – ஏன் இன்றும் – அரசவம்சத்தினர், பிரபுக்கள் சமூகத்தினருக்குரிமையான பிரிட்டனின் ஈட்டன் (Eton) ஹரோ (Harrow) போன்றது. காலனிஆட்சியில் பணக்காரவர்க்கத்தினர், உயர் உத்தியோகத்தர்களுக்குரிய கல்வி பயின்ற பிரசித்தமான இடம் றோயல் கல்லூரி.

எனவே இக்கல்லூரியிலிருந்து வெளியேறியவர்கள் பெருந்திறமைசாலிகள் என்பதில் என்ன அதிசயம்? பிரதமர்களாகவும் அமைச்சர்களாகவும் பிற்காலத்தில் உயர்ந்து விட்டால் அதில் என்ன பிரமாதம்? நாட்டின் ஜனாதிபதியாகவும் வரலாம்.

எமது கேள்வி கல்வியின் நோக்கத்தைக்கொண்டதே.

அடிமை ஆட்சியில் அகப்பட்டிருந்து புத்த பகவானின் சீல வாழ்க்கையை மறந்து, தார்மீக சமுதாய கோட்பாடுகுன்றி மேல்நாட்டு நாகரிகத்தில் மோகங்கொண்டிருந்த நாட்டை சுதந்திர நாடாக மாற்றியமைக்கும் சுதந்திரப் போரில் அரச கல்லூரியின் பங்கு என்ன? அன்றுஎன்ன? இன்றுதான் என்ன?

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தங்களின் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் பண்ணிய மானிடதெய்வங்களில் ஒருவரைப் போல் எவரையும் இந்த நாடு கண்டதா? பிரிட்டனின் ஹாரோ Harrow வில் கல்விகற்ற காலஞ்சென்ற பிரதமர் நேரு தமது வாழ்க்கையை புரட்சிகரமாக மாற்றியதால் சுதந்திரத் தலைவராக இந்தியப் பிரதமராக உயர்ந்ததில் பெருமையில்லை. அவரை "மாந்தருள் மாணிக்கம்" என மக்கள் மதித்தனர். அதுவே அவர் பூரணமனிதன் என்பதைக் குறிக்கின்றது.

பௌத்தமதம், பௌத்த கலாசாரம், பௌத்த வாழ்க்கை முறையே தென்னிலங்கையின் தூயதனிச் சொத்து. இதனை ஒழித்துவிட்டப் பிரிட்டிஷ் ஆட்சி படாதபாடெல்லாம் பட்டது. அதற்குதவியாயிருந்தது தான் அரசகல்லூரியும் மிஷனறிப்பாடசாலைகளும். அன்றிருந்த இந்த நாடு ஏழைமக்களுக்காகத் தங்களை அர்ப்பணிக்கும் மகாத்மா எவரையும் இன்னும் கண்டதில்லை. எனவே இன்று வறுமை, பட்டினி, அறியாமை, நோய் போன்ற கொடுமைகள் நாட்டைக் குட்டிச்சுவராக்குகின்றன. ஏழை மனிதனுக்கு விடிவு இன்னும் கிட்டவில்லை.

அரசியல் கட்சிகளை அமைத்தவர்கள், அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி எல்லாம் கைநாயகர் ஆகச்சிறந்த இன்றியமையாதவை. ஆனால் இவையாவும் உண்மையான கல்வியறிவுடையவர்கள் ஆகவே இருக்கவேண்டியது இன்றியமையாதது.

அவர்கள் யாரென்றதை மீண்டும் கவனிப்பது நலம். புத்தபெருமான் கூறியதை நினைவிற் கொண்டால், உண்மை எண்ணி, உண்மை பேசி, உண்மையாக நடப்பதே கல்விகற்றவனுக்கு அழகு. பரிசுத்தமான சிலமென்பது மனித சமுதாயத்தை மட்டுமல்ல விலங்கினங்களையும் நேசிப்பதாகும்.

பூரண மனிதன் எங்கே? நாமெங்கே?

# உபாலிக்கு கிடைத்த இலவச விளம்பரம்

இந்த முறை 'பட்ஜட்' பொது விவாதம் உப்புச்சப்பில்லாமல் போய்விட்டது. என்று பொதுவாகச் சொல்லப்பட்டபோதிலும் உறுப்பினர்களை உற்சாகம் கொள்ளச்செய்வதாகவும் பார்வையாளர்களைப் பரபரப்படையச் செய்வதாகவும் சில சம்பவங்கள் இடம்பெறுமலும் போகவில்லை.

வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் பற்றி அமைச்சரவையில் இடம்பெற்றதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த பரபரப்பூட்டும் விபரங்களையடுத்து பாராளுமன்றத்தில் நடந்தது. உபாலி விஜயவர்த்தன பற்றி நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் வெளியிட்ட தகவல்களும் மேலும் பரபரப்பையூட்டுவதாய் இருந்தன.

ஞாயிற்றுச் செய்திகளை வெளியிட்டதிலும் பிரச்னை ஏற்பட்டது. பிரசாரம் தேடிக்கொண்டுவிட்டது. வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் தமிழ் எம். பிக்கள் அதிகமாக இந்த விவகாரத்தில் அக்கறை காட்டிக்கொள்ளவில்லை.

### சம்பள உயர்வு

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள நடவடிக்கை பெரிதும் பாராட்டப்படவேண்டிய ஒன்று. கடந்த பலகாலமாகவே கவனிக்கப்படாதிருந்த ஒரு விஷயத்தில் ஜனாதிபதி நேரடியாகவே தலையிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வரவுசெலவுத்திட்டத்தில் அரசதுறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 70 ரூபாய் சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் தோட்டத்துறையில் இயங்கும் சகல தொழிலாளர் இயக்கங்களும் குமுறிக்கொண்டிருந்தன.

அண்மையில் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் பற்றிய கருத்தரங்கொன்றில் உரை நிகழ்த்திய இ.தொ.கா. தலைவரும் கிராமிய கைத்தொழில் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் கூட தோட்டத் தொழிலாளர் நிலை குறித்து மிகவும் கவலையுடன் கருத்தவெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ஏற்பாட்டின்படி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் பணிபுரியும் சுமார் 3லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் பயன் பெறவிருக்கிறார்கள்.

தேயிலை ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டிருப்பதனால் சுமார் 28 கோடி ரூபாய் மீதம் ஏற்படும் என்றும் இந்தப் பணம் முழுவதையுமே தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்குப் பயன்படுத்தலாம் என்றும் ஜனாதிபதி ஆலோசனை கூறியிருக்கிறார்.

ஆனால் இப்பொழுது வெளிவந்துள்ள செய்தியைப் பார்த்தால் பெரும் ஏமாற்றமாக இருக்கிறது.

நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய்தான் தோட்டத்தொழிலாளருக்கு சம்பள உயர்வு கிடைக்குமாம்.

இந்த மக்களுக்கு மாதத்தில் 26நாள் வேலை கிடைப்பதே பெருங்பாடு. அப்படிக்கிடைத்தாலும் 52 ரூபாய் தானே கிடைக்கும்.

தோட்டங்களைப் பேணும் அரசு சார்ந்த நிறுவனங்கள் நிலைகுலைகின்றன. நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்கை இந்த மக்களே பெற்றுத்தருகிறார்கள். இதை அரசும் பறைசாற்றுகின்றது.

அவர்களின் துன்பங்களைக் கண்டு கண்ணீர் வடிக்காதவர்களே இல்லை. ஆனால் வெறும் முதலைக்கண்ணீர்தானே!

கடந்த 70ரூபாய் சம்பள உயர்வை ஒருவாறு அரசு தட்டிக்கழித்துவிட்டது. இப்பொழுது ஏதோபெரிதாக செய்யப்போகிறார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த வேளையில் இரண்டு ரூபாய்தான் என்று அறியும்போது பெரும் ஏமாற்றமாகவே உள்ளது.

'வேறு'

## தோட்டத் தொழிலாளருக்கு மீண்டும் கண்துடைப்பு

இது வரவு செலவுத் திட்டத்தின் விவாதப்போக்கினையே மாற்றிவிட்டதுபோல் அமைந்துவிட்டது.

வரவு செலவுத் திட்டத்தின் ஆள நீளம் ஒருபக்கமாய் ஒதுங்கிவிட உபாலி விவகாரம் பூதாகாரமாக உருவெடுத்துவிட்டது. மக்கள் தொடர்பு சாதனங்களின் முக்கிய இடத்தையும் பிடித்துக்கொண்டுவிட்டது.

இதுவரை காலமும் மக்கள் மத்தியில் அதிகம் அறிமுகமில்லாமலிருந்த திரு. உபாலி விஜயவர்த்தனவுக்கு பெரியதொரு விளம்பரமும் கிடைத்துவிட்டது.

எதிர்காலத்தில் அரசியலில் பெரிய புள்ளியாக விளங்கப்போகிறார் என்று கூறப்படும் திரு. உபாலி விஜேவர்த்தனவின் நோக்கமும் அதுவேயானால் அவர் எதிர்பார்க்கக்கூடிய அளவிலும் அதிகமாகவே பிரசாரம் கிடைத்தது. போதாக்குறைக்கு உபாலி நிறுவனத்தினரின் புதிய வெளியீடுகளான "தி ஐலன்ட்" ஆங்கில நாளேடு, "திவயின" என்ற சிங்கள ஞாயிறு ஏடும் குறுகிய காலத்துக்குள்ளேயே வாசகர் மத்தியில் ஒரு கலக்கு கலக்கிவிட்டது ஒருபுறமிருக்க பாராளுமன்றச் ...

## உழைக்கும் சிறுவர்கள்: ஐ. நா. உப கமிட்டி தகவல்

உலகில் வாழுகின்ற 1450 லட்சம் பிள்ளைகளில் (12-15 வயது) ஒவ்வொரு மூன்றாவது பிள்ளையும் கடுமையான உடல் உழைப்பில் ஈடுபட்டுள்ளது. சிறுவயதில் இவர்கள் மேற்கொண்டுள்ள கடுமையான உடலுழைப்பு அந்த இளம் உடல்களின் ஆரோக்கியத்தையும் வளர்ச்சியையும் பாதிக்கிறது.

பிள்ளைகளைப் பாகுபாடுகளிலிருந்து தடுப்பது, பாதுகாப்பது குறித்த ஐ. நா. உப கமிட்டி மேற்படி தகவலை வெளியிட்டுள்ளது.

அனுபவமற்ற, பயிற்சிபெற்ற படிப்பறிவற்ற "தொழிலாளர்"களது அதிகரிப்பினால், அடிக்கடி நிகழும் விபத்துக்களுக்கும் தொழில் ரீதியான நோய்களுக்கும் காரணமாகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைத் தொழிலாளர்கள் முறை, உலகிலிருந்து வெகு காலத்துக்கு முன்னரே ஒழிக்கப்பட்டு விட்டபோதும், இன்னமும் அது மூன்றாம் நாடுகளில் மட்டுமல்ல "நாகரீக" வளர்ச்சியும் உயர் பொருளாதார வளர்ச்சியும் அடைந்துள்ள நாடுகளிலும் அது வேரோடிப்போயுள்ளது என்று "யுனெஸ்கோ கூரியர்" சஞ்சிகை தெரிவித்துள்ளது.

மேற்கு நாடுகளில் 1975ல் 180 லட்சமாக இருந்த பிள்ளைத் தொழிலாளர்கள் இன்று 240 லட்சமாக அதிகரித்துள்ளது;

வயது வந்தோருக்கு வேலை இல்லாதிருக்கும் பிரச்னை அதிகரித்து வரும் அதே வேளையில் பிள்ளைத் தொழிலாளர்களது தொகையும் அதிகரித்து வருகிறது. சர்வதேச சிறுவர் ஆண்டான 1979ல் அமெரிக்காவில் 14-15 வயதிலான 14 லட்சம் சிறுவர்கள் கடுமையான உடலுழைப்பிலீடுபட்டிருந்தனர்.

சில நாடுகளில் சிறுவர்கள் உழைக்கக்கூடிய ஆகக் குறைந்த வயது 14 ஆக உள்ளது. வேறுபல நாடுகளில் 13,12 வயதாகவும் உள்ளது. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் இந்த வயதெல்லையை 15 ஆக நிர்ணயித்துள்ளது. சோவியத் யூனியனில் சிறுவர்கள் உழைக்க ஆரம்பிக்கும் வயதை 16 ஆக ஆக்கியுள்ளது.

## யாழ். ம. கல்லூரி நத்தார் விழா

(அரியாலை)

யாழ் மத்திய கல்லூரியின் கிறிஸ்தவ மாணவ இயக்கமும், கத்தோலிக்க சங்கமும் இணைந்து நடாத்தும் நத்தார் விழா இன்று திங்கட்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பிற்பகல் நடைபெறும் இவ்விழாவிற்கு பிரதமவிருந்தினராக டரந்தன் நல்லாயன் அதியர் அருட்திரு ஏ. ஜே. தா பிரகாசா அடிகளார் கலந்து கொள்ளவிருக்கிறார். (இ)

## ஊழியர்கள் தமது பிரச்னைகளை எடுத்துக்கூறுவர்

(இறுப்பிட்டி)

மின்சார அபிவிருத்தி திணைக்கள தமிழ் ஊழியர் சங்கத்தினர் தமது பிரச்சனைகள் குறித்து விடயங்களை வடபிராந்திய பிரதி ஆணையாளர் திரு. சொ. கணேசநாதனை இன்று திங்கட்கிழமை பிரதி ஆணையாளர் அலுவலகத்தில் சந்திக்கவுள்ளனர்.

ஊழியர் சங்கத்தலைவர் திரு. ஆ. பஞ்சலிங்கம் தலைமையிலான இத்தூதுக்குழுவில் செயலாளர் திரு. ஆ. செல்வரத்தினம் உபதலைவர் திரு. சு. தர்மலிங்கம் ரன் உபசெயலாளர் திரு. எஸ். இராமநாதன் விற்பனை அதிகாரி திரு. ஏ. தங்கவேல் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (இ)

## வருடாந்தப் பரிசளிப்புவிழா

(கொழும்பு)

மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு இம்மாதம் 9ந் திகதி புதன்கிழமை நடைபெறுகிறது.

கல்லூரி அதிபர் திரு. வே. சுந்தரநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக கல்விப்பீடத் தலைவர் கலாநிதி க. கைலாசபதி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜோதி
உயர்ந்தமனிதன்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
THE BETSY
(Color-Adults only)

மனோகரா (காங்கேசன்துறை)
தினசரி 10-30, 2-30, 6-30, 9 30
சிவாஜி-கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) எம் ஜி. ஆர். - லதா நடித்த
சிரித்து வாழவேண்டும்
(ஈஸ்ட்மன் கலர்)

12-வது ஜனத்திரள் வாரம்!
சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6 15, 9-45
கமல்· ஸ்ரீதேவி
நம்பியார்-முத்துராமன்
குரு
யாழ். நகரில் மிகுந்த பரபரப்பூட்டிக் காட்சியளிக்கிறது
வண்ணத் திரை ஓவியம்.

ராணி
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
ரசிகரின் வேண்டுகோளுக்கிணங்க 9-12-81 வரை
நீடிக்கப்பட்டுள்ளது.
BRUCE LEE'S
ENTER THE DRAGON
11-12-81
முதல்
நீயா

RAJAH (JAFFNA)
Daily 10-30, 2-00, 4-30, 7-00 & 9-30
It rides with the great westerns
Jim Brown, Lee Van Cleef, Jim Kelly in
TAKE A HARD RIDE
(COLOR)
DO NOT MISS THIS OPPORTUNITY

கொட்டகை நிறைந்த காட்சியாக
ஹரன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
கமலஹாசன், கே. ஆர். விஜயா,
ஸ்ரீதேவி, சுந்தரராஜன், நாகேஷ்
நடித்த
நீலமலர்கள் (வண்ணக் காவியம்)
கிருஷ்ணன் பஞ்சுவின் உணர்ச்சிமிகு
உன்னத படைப்பு.

றீகல் யாழ் நகர்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா - நம்பியார் - நிர்மலா
நடித்த
ரகசிய போலிஸ் 115 (ஈஸ்ட்மன் கலர்)
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி)

வின்ஸர் இன்னும் சில தினங்கள் மட்டும்
(யாழ்ப்பாணம்)
காலை 10-30, பி. ப. 2-30, 6-15, 9-30
ரஜனி, சீமா
நடித்த
காளி
வெகு விரைவில்
(ரசிகரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தியாவில்
இருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)
நிறம் மாறாத பூக்கள்
(கலர்)


# இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 22ம் திகதி
திங்கட்கிழமை
(7-12-81)

மேடம்- முக்கியமான சந்திப்பு ஒன்று கிடைக்கும். முக்கியஸ்தர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும். உறவினர் வழியாலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு.

இடபம்- குருவின் அருளுடன் ஏறிக்கொண்டும் வெற்றிகாணும், குன்றென நிமிர்ந்து நிற்பீர் குவித்திடும் புகழும்

மிதுனம்- மதிநுட்பத்தின் மூலம் மனதைக் கவருவீர்கள். பயணங்களும் பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்படலாம். அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும். அரசாங்க சகாயம் உண்டு

கடகம்- அறிவுப் பசிக்கு இன்று ஆகாரமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்களின் ஆதரவும் கிடைக்கும்

சிம்மம்- இறைவழிபாடு மேலிடும். அரச பயத்திற்கு இடமேற்படும். நம்பிக்கை மோசடி நடக்கக்கூடும். இடைக்காலப் பிரிவிற்கும் இடமேற்படலாம்.

கன்னி- ஆனந்தமயமான வாழ்க்கை நம்பிக்கை வருவதை உற்சாகப்படுத்தும். கவிதைச் சுவையும் உண்டு. ஒளிமயமான சூழ்நிலை உருவாகும்

துலாம்- எதிர்பாராத் திசையில் தடை ஏற்படும். புதிய தொழில்களை இன்று பின்போடவும். கொடுக்கல் வாங்கல் மூலம் பகை உருவாகலாம். நல்ல தினம்.

விருச்சிகம்- தேடிய இன்பம் இன்று வாசலில் கிடைக்கும். மூத்தோர்கள் உதவிக்கும் இடமேற்படும். சிலருக்கு தெய்வ நம்பிக்கையில் அதிக நம்பிக்கை பிறக்கும். ஸ்தலயாத்திரைக்கும் இடமுண்டு.

தனு- தொழில் துறையில் புதிய உத்வேகம் காணப்படும். எந்த நிலைமையும் கட்டுப்படுத்துவதில் தனிப்புகழ் கிடைக்கும். வரவிலும் இருப்பிலும் நிலையை குறிக்கும். சிறப்பான தினம்.

மகரம்- விருந்துபசாரங்களில் அதிக உற்சாகம் காட்டுவீர்கள். பொதுத்துறையில் நாட்டம் பிறக்கும். எதிரிகள் சக்தியின் மதிப்பு குறையும். சாதனை.

கும்பம்- வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. வெளியிடத்து பயணம் வேதனைக்கு இடமாகலாம். பெரியோர்களைப் பகைத்துக் கொள்ளாது பொறுமையை பேணி நடக்கவும்.

மீனம்- வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும். எடுத்த காரியம் இறுதி நேரத்தில் ஏமாற்றத்தை அளிக்கும். நன்மை செய்யினும் வீண்பழி கேட்க நேரிடும். வெளியிடத்துக் கடிதம் வேதனையைத் தரலாம். இடமளிக்காதிருக்கவேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## மாதா கோவில் உற்சவம்

(மாவிட்டபுரம்)

கொல்லங்கலட்டி ஒட்டகப்புலம் லோர்தசமாதா கோவில் வருடாந்த பூர்த்தி உற்சவ தினமான வருகிற 8ம் திகதி நடைபெறவுள்ளது. காலைக் கூட்டுத் திருப்பலி பூசை. நல்ல நற்கருணை எழுந்தேற்றம் ஆசீர்வாதமும் மாலை திருமணித்தியால ஆராதனை நற்கருணை ஆசீர்வாதம் என்பனவும் இடம்பெறவுள்ளன. இவ்வாலய உற்சவம் கடந்த மாதம் 29ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வந்தது


செல்லா மானிப்பாய்
தினசரி 2 30 6 15, 9 30
9-11-81 வரை
சிவாஜி-விஜயா
தங்கப்பதக்கம்


## "தொழில்களில் ஈடுபடுவோருக்கு செயல்முறை அறிவு அவசியம்"

கருத்தரங்கில் கல்விப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

"இன்றைய நிலையில் எமது பொருளாதாரம், கல்வி ஆகியன சரியான முறையில் செயற்படுத்தப்படாமையினால் பல பிரச்சினைகள் உருவாகின்றன" என்று வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. சிவநாதன், கல்வியமைச்சின் முறைசாராக் கல்விப் பிரிவு தேசிய கூட்டுறவுச் சபையுடன் இணைந்து நடத்தும் 5 நாள் கருத்தரங்கில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. கே. சிவநாதன் மேலும் பேசுகையில், உற்பத்திப் பண்டங்களைச் சந்தைப்படுத்தல், மதிப்பீடு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு இன்றைய நிலையில் இதுபோன்ற கருத்தரங்குகள் மூலம் ஊன்றிநோக்கி அதிலும் தொழில்களில் ஈடுபட்டோர் செயல்முறை அறிவைப் பெறுவது அவசியமாகும்" என்றார்.

யாழ் அரசாங்க அதிபரும், யாழ். மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா இக்கருத்தரங்கை ஆரம்பித்துவைத்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கல்விப் பகுதிப் பேராசிரியர்களும், பட்டப் பின்படிப்பு முதுமாணி ஆசிரிய மாணவர்களும் இக்கருத்தரங்கில் கலந்து, தம கருத்துக்களை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (மா)

## ராஜினாமா

(மண்டைதீவு)

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. த. சந்திரகுமார் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இவரது இடத்திற்கு புதியவர் ஒருவரை நியமிப்பதில் மேற்படி வித்தியாசாலை அதிபர் முயற்சிசெய்துவருகிறார்.

## நிர்வாக மேற்பார்வையாளர்

(மண்டைதீவு)

மண்டைதீவு, அல்லைப்பிட்டி மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப பணிமனையின் நிர்வாக மேற்பார்வையாளராக யாழ் மேலதிக அரச அதிபர் திரு. எஸ். தம்பையா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் ஒரு விசேட ஆணையாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



உற்சாகம் உழைப்பு
ஊக்கம் ஆரோக்கியம்
தருவது புரதச் சத்துமிக்க புரோட்டினெக்ஸ் பரீட்சைக்குப் படிக்கும் பிள்ளைகளும் சதா உழைக்கும் பெற்றோரும் ஆயாசமும், களைப்பும் தீர அருந்துவது புரதச் சத்துமிக்க புரோட்டினெக்ஸ். உடலுக்கு உற்சாகத்தையும் மூளைக்குச் சுறு சுறுப்பையும் தருவது
புரோட்டினெகஸ்
புரதச் சத்து நிறைந்த புரோட்டினெக்ஸ்
வாழ்க்கைக்குத் தருகிறது. ஆனந்தம், வலிமை, உற்சாகம்
புரதச் சத்து என்றால்
புரோட்டினெக்ஸ்
சொக்கலேட் ருசியுள்ள பானம்
புரோட்டினெக்ஸ்.
50 கிரு. விலை ரூபா. 16.85


Pfizer
"ஏன் புரோட்டினெக்ஸ்"
த. பெ. 1362 கொழும்பு
ஏன் புரோட்டினெக்ஸ்
அருந்துகின்றீர்கள் என்பதை எழுதியனுப்பும் சிறந்த
வாசகருக்கு கிழமை தோறும் புரோட்டினெக்ஸ் வழங்கப்படும்.
பெயர்: ____________________
விலாசம்: ____________________
அருகாமையிலிருக்கும் புரோட்டினெக்ஸ்
விநியோகஸ்தர்: ____________________
திகதி: ____________ கையொப்பம் ____________

# "கூட்டுறவுஇயக்கத்தை முற்ருகஒழித்துக்கட்ட அரசு முயற்சிக்கிறது!'

## 'ஆலால்' குற்றம் சாட்டுகிருர்

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவு இயக்கத்தை முற்ருக ஒழிப்பதற்கான செயல் முறைகளே, இந்த அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதாக கோப்பாய் எம். பி யும், யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவருமான திரு ஆ. மு. ஆலாலசுந்தரம் குற்றம்சாட்டினுர்.

யாழ் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபை, கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் நினைவு தினத்தையொட்டி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இரு நாட்களாக பொருட்காட்சியையும், விற்பனையையும், கருத்தரங்கையும் கலைநிகழ்ச்சிகளையும் நடாத்தியது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட, பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளரும், பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவருமான திரு எம். பி ஜெகநாதன், கூட்டுறவுக்கொடியை ஏற்றிவைத்தார்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. மகளிர்குழு கூட்டுறவு தேசியகீதம் பாடினர் சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா மங்களவிளக்கேற்றிவைத்தார்.

திரு. ஆலாலசுந்தரம் தமது தலைமையுரையில் தொடர்ந்து கூறியதாவது.

"கூட்டுறவுத்துறை அமைச்சின்கீழ் இயங்கிவந்த நெசவுத் தொழில், கடற்றொழில் ஆகியன வேறு அமைச்சுகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. இன்னும் சில காலத்துக்குள் கூட்டுறவு இயக்கத்தை முற்ருக இழக்க வேண்டியதில ஏற்படுமென்றும் போல தெரிகிறது. கூட்டுறவுத் துறையை வளர்த்த பெரியார்களுள் அமரர் வீரசிங்கமும் ஒருவர் கூட்டுறவு வாழ்க்கைக்கு ஒரு உதாரண புருஷராக அவர் விளங்கினுர்." என்ருர்.

திரு எம் பி ஜெகநாதன் பேசுகையில், யாழ் மாவட்டத்தில் உற்பத்திசெய்யப்படும் பனம் பொருள்கள் வேறு மாவட்டங்களுக்கு கொண்டு சென்று விற்பனைசெய்யப்படுவதால் அவை பிறருக்கு அறிமுகப்படுத்தப்படுவதுடன், எமது வருமானமும் வேலைவாய்ப்பும் அதிகரிக்கிறது" என்ருர்.

திரு க. கனகராசா பேசுகையில், கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்கு நல்லவழி, அங்கு உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்கி ஆதரிப்பதாகும் என்ருர்.

யாழ் கூட்டுறவு ஆணைக்குழு ஆணையாளர் திரு எஸ் வேலாயுதபிள்ளை பேசுகையில், மீனவர் கூட்டுறவுச் சங்கத்தை எங்களிடம் இருந்து பிரிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோப்பாய் எம் பி யைக் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய நாணயச்சங்கங்களின் கருத்தரங்கைத் தொடர்ந்து யாழ் கூட்டுறவுக் கல்லூரி மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

யாழ்மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் மலரை வெளியிட்டுவைத்து உரையாற்றினுர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன [மா

## இப்படியும் நடக்கிறது

பிளவுபட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஐக்கியப்படுத்துவதில தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவர் தீவிரமாக ஈடுபட்டு வருவது "ஈழநாடு" வாசகர்களுக்கு பழைய செய்தி.

அந்தப் பிரமுகர் யார் என்பதுதான் புதிர்.

சூசகமான தகவல்: திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குழுவையும் திரு. மைத்திரிபால சேனநாயக்கா குழுவையும் இணைப்பதில் கடந்த சில தினங்களாக நடைபெற்றுவரும் 'சமரசத்தில்' சமாதானத்தை ஏற்படுத்த முயற்சித்துக்கொண்டிருக்கும் அந்த தமிழ் அரசியல் பிரமுகர்......ஒரு தமிழ் எம். பி.

— ஊடுருவி

## சென்னை நாட்டிய மாநாடு: 18-ல் ஆரம்பம்

சென்னை, டிச 6

நாட்டிய மாநாடு ஒன்று சென்னையில் இம்மாதம் பதினெட்டாம்திகதி ஆரம்பமாகிறது.

சென்னையில் இம்மாதம் இருபத்தொன்பதாம் திகதி வரை நடைபெறும் இம் மகாநாட்டை, பம்பாய் புனாபாய் நினைவுக்கழகமும், சென்னை நிருத்யோதயாவும், தியாகராஜநகர் கிருஷ்ணகான சபையும் இணைந்து நடத்துகிறது. நாட்டிய மகாநாட்டுக்கு திருமதி ருக்மணிதேவி தலைமை வகிப்பார்.

சென்னையில் முதல்முறையாக இடம்பெறும் இந்த நாட்டிய மாநாடு தியாகராஜ நகர் கிருஷ்ணகான சபைக்கான விகார் அரங்கில் நடைபெறுகிறது. பிரபல நாட்டிய கலைஞர் செல்வி (டாக்டர்) பத்மா சுப்பிரமணியம் இம் மகாநாட்டின் அமைப்பாளராக உள்ளார். மகாநாட்டில் உயர்ந்த நாட்டிய நிகழ்ச்சிகள் பல ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

## யாழ் அபிவிருத்தி...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

### உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

அப்பொழுது சபையிலுள்ள பல உறுப்பினர்கள், தாங்கள் கொடுத்த வேலைத்திட்டங்கள் எதுவும் இப்பொழுது முன்வைக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் இடம்பெறவில்லை என்று குற்றம்சாட்டினர்.

இந்நிலையில் சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

சபையின் பதில் தலைவர் திரு ஆ. நடராசா மேசையில் இருந்த மணியை பலமுறை அடித்து அமைதியை நிலைநாட்டி, வரவு செலவுத்திட்டம் தயாரித்த உத்தியோகத்தர் இங்கு இல்லாததால் இதற்குப் பதிலளிக்கமுடியாமல் இருப்பதாக விளக்கினுர்.

### பிற்பகல் சபைகூடியதும்..

இதைத் தொடர்ந்து வரவு செலவுத்திட்ட விஷயத்தை நிரந்தரத் தலைவர் முன்பாக விவாதிப்பதற்காக ஒத்திவைத்தார்.

பிற்பகல் 2 மணிக்கு சபைத் தலைவர் திரு சு நடராசா முன்னிலையில் கூட்டம் மீண்டும் ஆரம்பமானது.

வரவுசெலவுத்திட்டம் சம்பந்தமாக சபையில் முன்னர் நடந்த விஷயங்கள் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

"தனிப்பட்ட முறையில் அல்லாமல் திட்டமிடல் பகுதியுடன் கலந்தாலோசித்து ஒரு வரவுசெலவுத்திட்டத்தை தயாரிப்போம்" என்று தலைவர் திரு நடராசா ஆறுதல் சொன்னுர்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில்

"ஒவ்வொரு தொகுதிக்கும் வேலைத்திட்டங்களுக்கு 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. இது அடிப்படைக் கொள்கை. ஆனால் நாங்கள் சமர்ப்பித்த ஒரு திட்டத்தை மறைத்துவிட்டு பின்கதவால் வந்தவர்களின் திட்டத்தை புகுத்துவது...?" என்ருர்.

தலைவர் (குறுக்கிட்டு) "பின்கதவால் வருவது என்பது இல்லாத் இணைக்கவே விழுந்து நடக்கிறது. நீங்கள் எவ்வளவு பணம் ஒதுக்குகிறீர்கள்?"

திரு. வி. என். நவரத்தினம்: தொகுதிக்கு 5 லட்சம் வீதம் 50லட்சம்ரூபாவாவது அபிவிருத்திசபையின் வேலைகளுக்கு ஒதுக்குகிருேம் என்ருர். (ந)

## இன்று

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையம் நத்தார்தினத்தை முன்னிட்டு நடாத்தும் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியை இன்று பிற்பகல் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு நடராசா திறந்து வைப்பார் நிலையத் தலைவி சங் சகோதரி பூலாவி தலைமையில் நடைபெறவுள்ள இத்திறப்பு விழாவில் முதலுதவி சிகிச்சை பற்றிய பயிற்சிநெறியில் கலந்துகொண்ட வாழ்வொளி நிலையத்தின் மாணவிகளுக்கான சான்றிதழ்களை செஞ்சிலுவை ஜோசன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ் மாவட்ட ஆணையாளர் டாக்டர்கந்தன் சின்னுசித்தம்பி வழங்குவார்.

## நத்தார்பாடல் ஆராதனை

[அரியாலை]

உடுவில் மகளிர் கல்லூரியும், கைதடி நவீகட பாடசாலையும் இணைந்து நடாத்தும் நத்தார் பாடல் ஆராதனை உடுவில் திருச்சபை ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது (அ)

## "திட்டங்களை நிறைவேற்ற மீண்டும் சந்தர்ப்பம்"

### 'வித்தி' நன்றி கூறுகிருர்

[யாழ்ப்பாணம்]

"யாழ் பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பணிகளை முடிக்கவும் புதிய திட்டங்களை ஆரம்பிக்கவும் மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நன்றிதெரிவிக்கின்றேன்"

யாழ் பல்கலைக்கழக உபவேந்தராக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் சு. வித்தியானந்தன் நேற்று நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது;

'எனது காலத்தில் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன அவை பூர்த்தி செய்யப்படவேண்டும் வேறு பல புதிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். ஏற்கனவே அரைகுறையாக விருந்த வேலைகளை பூர்த்தியாக்க ஆதரவும் ஒத்துழைப்பும் தந்ததற்கு நன்றிகூறுகிறேன்''

எதிர்வரும் ஆண்டில் முக்கிய பணி நிறைவேற்றப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## மாவட்ட அமைச்சர் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் தமிழ் சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் படிக்கும் இக்கல்லூரிக்கு மண்டபம் அமைக்கப்பட்டது பாராட்டுக்குரியது

யாழ்ப்பாண சிங்கள மகா வித்தியாலயத்தில் 3 புதிய மண்டபங்களை திறந்துவைத்துப்பேசிய யாழ் மாவட்ட அமைச்சர் திரு யு பி விஜயகோன் மேற்கண்டவாறு கூறினுர்

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு சு நடராசா பாடசாலைக் கொடியை ஏற்றிவைத்தார் யாழ் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையாவும் உரையாற்றினுர்

மாவட்ட அமைச்சர் திரு விஜயகோன் பேசுகையில், இப்பாடசாலை 62 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டதாகவும், இன்று அறுநூறு மாணவர்கள் படிப்பதாகவும் தெரிவித்தார். (ந)

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி வெள்ள நிவாரணத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபா

[கொழும்பு]

வெள்ளப்பெருக்கினுல் பாதிக்கப்பட்டவர்களுக்குநிவாரணம் வழங்கும் பொருட்டு முதற்கட்ட உதவியாக யாழ்ப்பாணத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும், கிளிநொச்சிக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனுவின் பணிப்புரையின் பேரில் சமூக சேவைகள் அமைச்சு இந்நிதியை ஒதுக்கியுள்ளது

நாளாந்தம் வழங்கப்படும் வெள்ள நிவாரண உதவிகளை மேலும் அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது


# பழைய விலையில்

## ஹொண்டா மோட்டார்சைக்கிள் கிடைக்கிறது

- ★ வேண்டிய தரங்களில்
- ★ வேண்டிய நிறங்களில்
- ★ முன்னைய விலைகளில் பெறுவதற்கு

maharaja organisation

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.
122, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8267


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 86-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட் கம்பனிக்காக யாழ்ப்பாணம், [illegible] வீதி, 803-ம் இலக்கத்திலுள்ள கலாநிலய அச்சகத்தில் 1981-ம் வருடம் டிசம்பர் 7-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100846/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி: 7107, 688, 8126.